[1992 மார்ச் 30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. செ. கு. தமிழரசன்.

மாண்புமிகு திரு. செ. கு. தமிழரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குடிசைமாற்று வாரிய வீடுகளை இதற்கு முன்னர் இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே பலர் அவர்கள் பெயரிலே எடுத்து வியாபாரம் செய்து இருக்கிறார்கள். பலருக்கு விற்றிருக்கிறார்கள், வாடகைக்குத் தந்திருக்கிறார்கள். இதுகுறித்து பல புகார்களும் வந்திருக்கின்றன. இவை குறித்து அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு இது சம்பந்தமான புகார்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 393: திரு. ஆர். தங்கராஜ், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

393—

சாலைக்கரைக் கிராமத்தில் பாலர் பள்ளி.

* 2929—திரு. ஆர். தங்கராஜ் :
மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்குவிடையளிப்பாரா—

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியத்தில், சாலைக்கரைக் கிராமத்தில், தனியாக பாலர் பள்ளி அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை,

திரு. ஆர். தங்கராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று பதில் சொல்லிவிட்டார்கள். போற்றுதலுக்குரிய நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியிலே இருக்கின்ற மக்கள் மிகவும் வறுமையிலே வாடுகின்ற மக்கள்

அந்த வறட்சி மிகுந்த பகுதியிலே, இந்தப் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலே, இந்த ஆண்டிலாவது அந்தப் பாலர் பள்ளி மையத்தை அமைத்துத்தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு விதிகளின்படி புதிதாக குழந்தைகள் நல மையம் ஆரம்பிக்க வேண்டும் என்றால், 70 குழந்தைகள் இருக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற சாலைக்கரை கிராமத்தில் 40 குழந்தைகள் இருக்கிறார்கள் என்ற தகவல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாகக் கிடைத்திருக்கிறது. 70 குழந்தைகள் தமிழகத்திலே எங்கேயிருந்தாலும் அங்கே புதிய மையங்களை மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியினுடைய அரசு நிச்சயமாக அமைத்துத்தரும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 235: திரு. ஜி. பழனிசாமி, உறுப்பினர் இருக்கையில் இல்லை.

வினா எண். 394. திருமதி க. பழனியம்மாள், டாக்டர் மு. சீனியம்மாள். மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

394—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா.

* 4212—திருமதி க. பழனியம்மாள், டாக்டர் மு, சீனியம்மாள் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க வேண்டி கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் கிடைக்காவண்ணம் நிலச் சொந்தக்காரர்கள் வாங்கியுள்ள தடை உத்தரவுகளை நீக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

தனியார் நிலங்களை அரசு கையகப்படுத்தும் போது நிலச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்தில் தடையாணை பெறும் தருணத்தில் அத் தடை ஆணைகளை நீக்க அரசு தரப்பில் வழக்கறிஞர்கள் மூலம் உயர் நீதிமன்றத்தில் எதிர் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.